செ.வெ. எண்: 29

நாள்: 20.08.2018

## பத்திரிக்கைச் செய்தி

**சிறுபன்மையின மாணவர்களுக்குகான கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம் 2018-19**

நீலகிரி மாவட்டத்தில் உள்ள அரசு/அரசு உதவிப்பெறும் மற்றும் மைய/மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும், தமிழ்நாட்டில் மைய அரசால் சிறுபான்மையினராக அறிவிக்கப்பட்டுள்ள இஸ்லாமியர், கிறித்துவர், சீக்சியர், புத்தமதத்தினர், பார்சி மற்றும் ஜ்ஜன மதத்தை சார்ந்த சிறுபான்மையினர் இன மாணவ/மாணவியர்கள் 2018-19ஆம் கல்வியாண்டிற்கு பள்ளி படிப்பு ( Pre-Matric Scholarship ) கல்வி உதவித்தொகையும், 11 ஆம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை பள்ளி மேற்படிப்பு( Post-Matric Scholarship) கல்வி உதவித்தொகையும் மற்றும் தொழிற்கல்வி/தொழிற் நுட்பக்கல்வி பயிலும் மாணவ/மாணவியர்க்கு தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான ( Marit-Com-Means Based Scholarship ) கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் தேசிய கல்வி உதவித்தொகை இணையம் ( National Scholarship Portal) www.scholarship.gov.in வாயிலாக விண்ணப்பிக்கலாம். மத்திய அரசின் மூலம் வழங்கப்பட்டு வரும் மேற்கண்ட கல்வி உதவித்தொகை பெறுவதற்கு புதியது( Fresh) புதுப்பித்தல் (Renewal) ஆன்லைன் மூலம் (Online) மாணவ/மாணவியர்கள் விண்ணப்பிக்க **கடைசி நாள் 30.09.2018.** மேலும் கூடுதல் விவரங்களுக்கு நீலகிரி மாவட்ட ஆட்சியர் கூடுதல் அலுவலக கட்டிட வளாகம், பிங்கர் போஸ்ட்டில் அமைந்துள்ள மாவட்ட பிறபடுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலத்தை தொடர்பு கொள்ளுமாறு இதன் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/-xxx
மாவட்ட ஆட்சித்தலைவர்,
நீலகிரி மாவட்டம்.

/உ. ந. உ. ப /

மாவட்ட ஆட்சியருக்காக

16/08/18